

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்த் திரையுலக மூத்த நடிகரும், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப் படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான ராஜேஷ் அவர்கள் காலமானதை யொட்டி அவரது இல்லத்திற்கு நேற்று (29.5.2025) நேரில் சென்று, அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் ஆகியோர் உள்ளனர்.

# 49 முடிவுற்ற பணிகள் - முதல்வர் தொடங்கி வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தொடங்கி வைக்கப்பட்ட வாகனங்களின் விவரங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அமுக்கப்பட்ட இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் 6 நீர் தெளிக்கும் வாகனங்கள்; பழுதடைந்த மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றி சீர்செய்யும் வகையில், 6 ஹைட்ராலிக் இயந்திரங்கள், அலுவலர்கள் களப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் 16 ஆய்வு வாகனங்கள், தூய்மைப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் 4 இயந்திரப் பெருக்கி வாகனங்கள், சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லும் வகையில் 4 கல்விச் சுற்றுலா பேருந்துகள், டீசல் மூலம் இயங்கும் 12 சிறிய அளவிலான இயந்திரப் பெருக்கி வாகனங்கள், பேட்டரி மூலம் இயங்கும் 2 சிறியரக இயந்திரப் பெருக்கி வாகனங்கள்;

**என மொத்தம் 19.44 கோடி ரூபாய் மதிப்பிலான 50 புதிய வாகனங்களின் சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட பணிகளின் விவரங்கள்**

பள்ளிக்கரணை விரிவான பாதாள சாக்கடை திட்டம் மயிலை பாலாஜி நகர், காமகோடி நகர் மற்றும் வள்ளல் பாரி நகர்;

முகலிவாக்கம் விரிவான பாதாள சாக்கடை திட்டம் மணப்பாக்கம் முகலிவாக்கம் பிரதான சாலை கழிவுநீரேற்று நிலையத்தின் பகுதி வெள்ளோட்டம்;

மடிப்பாக்கம் பகுதிக்கான விரிவான பாதாள சாக்கடை திட்டம் அண்ணா நகர், ராம் நகர் தெற்கு விரிவாக்க பகுதி மற்றும் தந்தை பெரியார் நகர்;

**என மொத்தம் 188 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 முடிவுற்ற விரிவான பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் திறந்து வைக்கப்பட்ட பணிகளின் விவரங்கள்**

கடலூர் மாநகராட்சியில் 4.98 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட வெள்ளி கடற்கரை, திருப்பாப்புலியூர் சரவணா நகர் பகுதியில் 2.50 கோடி ரூபாய் செலவில் மண்டல அலுவலகக் கட்டடம், முதுநகர் பகுதியில் 2.50 கோடி ரூபாய் செலவில் மண்டல அலுவலகக் கட்டடம், காஞ்சிபுரம் மாநகராட்சியில் 4.60 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள ஜவஹர்லால் நேரு சந்தை, ஒசூர் மாநகராட்சி, எம்.ஜி.ஆர் மார்க்கெட்டில் 5.88 கோடி ரூபாய் செலவில் புதிய நவீன வணிக வளாகம் மற்றும் 3.98 கோடி ரூபாய் செலவில் புதிய மீன் மார்க்கெட், கும்பகோணம் மாநகராட்சி, காந்தியடிகள் சாலையில் 2.62 கோடி ரூபாய் செலவில் அறிவுசார் மையம், புதுக்கோட்டை மாநகராட்சியில் 6.42 கோடி ரூபாய் செலவில் தினசரி அங்காடி, சேலம் மாநகராட்சிக்குட்பட்ட சேலம் வடக்கு பகுதியில் 10 கோடி ரூபாய் செலவில் புதுப்பித்து அழகுபடுத்தப்பட்ட அல்லிக்குட்டை ஏரி, திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட திருப்பூர் தெற்கு பகுதியில் சங்கிலிப் பள்ளம் ஓடையின் மேல் 1.50 கோடி ரூபாய் செலவில் உயர்மட்ட பாலம்;

குடியாத்தம் நகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 2.19 கோடி ரூபாய் செலவில் அறிவுசார் மையம், விழுப்புரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் தெரு நாயக்கன் தோப்பு என்ற இடத்தில் 1.36 கோடி ரூபாய் செலவில் வணிக வளாகம், வாணியம்பாடி நகராட்சியில் 4.39 கோடி ரூபாய் செலவில் வாரச் சந்தை பகுதியில் மார்கெட், ஒட்டன் சத்திரம் நகராட்சி, காந்தி மார்கெட்டில் 21.25 கோடி ரூபாய் செலவில் கடைகள், குழந்தை வேலப்பர் கோயில் மலைப் பாதையில் 18.64 கோடி ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கிரிவலப் பாதை, உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பொள்ளாச்சி பழனி சாலையில் 3.75 கோடி ரூபாய் செலவில் கூடுதல் பேருந்து நிலையம், இராஜபாளையம் நகராட்சி, பழைய பேருந்து நிலையத்தை இடித்து 2.90 கோடி ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம், தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள் உதவிக்கு வரும் நபர்கள் தங்கும் வகையில் 1.25 கோடி ரூபாய் செலவில் சிறப்பு வசிப்பிட கட்டடம், சுரண்டை நகராட்சி, வார்டு எண்2 இல் 1.88 கோடி ரூபாய் செலவில் கல்யாண மண்டபம்;

**என மொத்தம் 102 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் 19 முடிவுற்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்**

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் கீழ் வேலூர் மாவட்டம், சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருத்தணி சாலை இடுகாட்டிற்கு செல்லும் வழியில் 10.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக சாய்வுதள பாலம் அமைக்கும் பணி;

வேலூர் மாவட்டம், சோளிங்கர் நகராட்சி பேருந்து நிலையத்தை 4.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன மயமாக்குதல் பணி;

**என மொத்தம் 15 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**பேரூராட்சிகள் சார்பில் திறந்து வைக்கப்பட்ட பணிகளின் விவரங்கள்**

பேரூராட்சிகள் ஆணையரகத்தின் கீழ் வேலூர் மாவட்டம் - பள்ளிக்கொண்டா, கோயம்புத்தூர் மாவட்டம் - மோப்பிரிபாளையம், சிறுமுகை ஆகிய இடங்களில் 6.12 கோடி ரூபாய் செலவில் 3 வாரச்சந்தைகள், வேலூர் மாவட்டம் - பள்ளிக்கொண்டா மற்றும் ஒடுக்கத்தூர் ஆகிய இடங்களில் 56.20 கோடி ரூபாய் செலவில் 2 குடிநீர் மேம்பாட்டு பணிகள், இராணிப்பேட்டை மாவட்டம் - விளாப்பாக்கம், கோயம்புத்தூர் மாவட்டம் - ஆணைமலை ஆகிய இடங்களில் 3.05 கோடி ரூபாய் செலவில் வகுப்பறைகள், திருவண்ணாமலை மாவட்டம் - தேசூர், தென்காசி மாவட்டம் - வடகரை கீழ் பிடாகை, திண்டுக்கல் மாவட்டம் - கீரனூர் ஆகிய இடங்களில் 3.43 கோடி ரூபாய் செலவில் 3 பேரூராட்சி அலுவலகக் கட்டடங்கள், கிருஷ்ணகிரி மாவட்டம் - ஊத்தங்கரையில் 1.46 கோடி ரூபாய் செலவில் அறிவுசார் மையம், கோயம்புத்தூர் மாவட்டம் - ஒத்தக்கால் மண்டபத்தில் 1.46 கோடி ரூபாய் செலவில் நவீன எரிவாயு தகனமேடை, நாமக்கல் மாவட்டம் - மோகனூரில் 2.80 கோடி ரூபாய் செலவில் சமுதாயக்கூடம், கன்னியாகுமரி மாவட்டம் - திருவட்டாறில் 2.55 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்ட பேருந்து நிலையம்;

**என மொத்தம் 77.07 கோடி ரூபாய் செலவில் 14 முடிவுற்றப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**பேரூராட்சிகள் சார்பில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்**

பேரூராட்சிகளின் ஆணையரகத்தின் கீழ் வேலூர் மாவட்டம் - பனப்பாக்கம் பேரூராட்சியில் 6.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP cum FSTP), ஒடுக்கத்தூர் முதல் நேமந்தபுரம் வரை 8.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாலம்,

இராணிப்பேட்டை மாவட்டம் - விளாப்பாக்கத்தில் 1.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை, தென்காசி மாவட்டம் - ஆழ்வார் குறிச்சி மற்றும் பண்பொழி ஆகிய இடங்களில் 2.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 பேரூராட்சி அலுவலகக் கட்டடங்கள்;

**என மொத்தம் 18.38 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் விவரங்கள்**

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 20 ஊரக குடியிருப்புகளுக்கான 15.48 கோடி ரூபாய் செலவிலான கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட 41 ஊரக குடியிருப்புகளுக்கான 45.10 கோடி ரூபாய் செலவிலான கூட்டுக் குடிநீர் திட்டம்;

**என மொத்தம் 60 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 58,000 மக்கள் பயன்பெறும் வகையிலான 2 முடிவுற்ற கூட்டுக் குடிநீர் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் / பேரூராட்சிகள் இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ். சிவராசு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் கௌரவ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் மீது அளவற்ற அன்பு கொண்டவர்

# மூத்த நடிகர் ராஜேஷ் மறைவையறிந்து மிகவும் வருந்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, மே 30 -

தமிழ்த் திரையுலக மூத்த நடிகர் ராஜேஷ் அவர்களின் மறைவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**தமிழ்த் திரையுலக மூத்த நடிகர் ராஜேஷ் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.**

**40 ஆண்டுகளுக்கும் மேலாக சுமார் 150 திரைப்படங்கள் மற்றும் பல சின்னத் திரைத் தொடர்களில் நடித்ததோடு, பின்னணிக் குரல் கலைஞராகவும் முத்திரை பதித்தவர் ராஜேஷ் அவர்கள்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளவற்ற மரியாதையும், அன்பும் கொண்டு விளங்கினார். தலைவர் கலைஞர் அவர்களும், ராஜேஷ் அவர்களது திருமணம் முதலிய அவரது இல்ல நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து**



**கொண்டு வாழ்த்துவது வழக்கம்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் மறைவுற்றபோது, "தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களிலும் அவர் ஓர் அங்கம்" என நெகிழ்ச்சியோடு பேசி தனது இரங்கலைத் தெரிவித்தவர் ராஜேஷ் என்பதை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.**

**திரைத்துறையில் அவரது நீண்ட அனுபவத்தைக் கருத்தில்கொண்டு, கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் தலைவராக அவரை நியமித்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.**

**அவரது மறைவினால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரைத்துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கான

# 15-வது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் தீர்வு!

## 1 லட்சத்து 10 ஆயிரம் பேர் பயனடைவர்! அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல்!

**சென்னை, மே 30 -**

**தமிழ்நாடு அரசு அனைத்துப் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கான 15-வது ஊதிய ஒப்பந்தப் பேச்சு வார்த்தையில் தீர்வு காணப்பட்டுள்ளதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்துள்ளார். அதன் மூலம் ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 787 பேர் பலனடைவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:

*தமிழ்நாடு அரசு அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கான, 15வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையானது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, குரோம்பேட்டை, மாநகர் போக்குவரத்துக் கழகப் பயிற்சி மைய வளாகத்தில் இறுதி செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து எழுநூற்று என்பத்து ஏழு (1,09,787) பணியாளர்கள் 15வது ஊதிய ஒப்பந்தத்தின் கீழ் 48,006 ஓட்டுநர்களும், 42,825 நடத்துநர்களும், 13,003 தொழில்நுட்பப் பணியாளர்களும் மற்றும் 2,529 இதரப் பிரிவு பணியாளர்களும் பலனடைவார்கள்.*

*1.9.2023 முதல் அடிப்படை ஊதியத்தில் 6% உயர்த்தி ஊதியம் நிர்ணயம் 1.09.2024 முதல் 4 காலாண்டு நிலுவைத்தொகை தவணையாக வழங்கப்படும்*

*ஊதிய உயர்வினால் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.1,420 முதல் அதிகபட்சம் ரூ.6,460 வரை பணப்பலன்கள் கிடைக்கும்*

*01.09.2023 முதல் அடிப்படை ஊதியத்தில் 6% உயர்த்தி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு, நிலுவைத் தொகை 01.09.2024 முதல் 4 காலாண்டு தவணையாக வழங்கப்படும். திருமண கடன் ரூ.50,000/ லிருந்து ரூ.1,00,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும் பண்டிகை முன்பணம் ரூ.10,000/ லிருந்து ரூ.20,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும். ஊக்கத்தொகை (இன்சென்டிவ்) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒரே முறையில் கணக்கீடு செய்து தொழில் நுட்பம் மற்றும் நிர்வாக பணியாளர்களுக்கு வழங்*



*குவது தொடர்பாக குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

*குறைந்தபட்சத் தொகையாக நாளொன்றுக்கு ரூ.6/ லிருந்து ரூ.20/ ஆக உயர்த்தி வழங்கப்படும் தொழிலாளர்கள் அவர்களது பணிக்காலத்தில் வழங்கப்பட்ட தண்டனை குறித்த மேல்முறையீடு 90 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும் என்பதை ஒரு முறை தளர்த்தி 30.06.2025 க்குள் மேல்முறையீடு செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப பரிசீலித்து, ஆணைகள் வழங்கப்படும் நாளிலிருந்து உரிய பலன்கள் வழங்கப்படும் உள்ளிட்ட தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் 15வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையில் இறுதி செய்யப்பட்டது.*

இக்கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, தொழிலாளர் தனி இணை ஆணையர் இல.ரமேஷ், நிதித்துறை அரசு சிறப்புச் செயலாளர் அருண்சுந்தர் தயாளன், போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் செயலாளர் எஸ்.கார்மேகம், ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை குழுவின் உறுப்பினர் செயலர் /கூட்டுநர் டாக்டர்.த. பிரபு சங்கர், நிர்வாகத்தரப்பு குழு. துணைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பேரவை / தொழிற்சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ம.தி.மு.க. பொதுச்செயலாளர்

# வைகோவின் சகோதரி திருமதி சரோஜா மறைவு!

*சென்னை, மே 30*

*மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் கழகப் பொதுச்செயலாளர்வைகோ அவர்களின் இரண்டாவது சகோதரி திருமதி சரோஜா அவர்கள் நேற்று, எண். 264, அம்மாயி அம்மாள் சந்து, அய்யாவு நாயுடு காலனி, அமைந்தகரை, சென்னையில் உள்ள அவர்களது இல்லத்தில் இயற்கை எய்தினார்.*

*அவரது உடலுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

*இன்று (30.05.2025 வெள்ளிக்கிழமை) மதியம் 1.00 மணிக்கு சென்னை, அரும்பாக்கம் மயானத்தில் உடல் நல்லடக்கம் நடைபெறுகிறது.*




# தி.மு.க. இளைஞர் அணி

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய மற்றும் கரூர் மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 30.05.2025 வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | ஈரோடு தெற்கு | தங்கம் மஹால், மேட்டுக்கடை, பெருந்துறை சாலை, ஈரோடு. |
| | மாலை 3.00 மணி | ஈரோடு மத்திய | விருட்சம் ஹால், பைபாஸ் சாலை, வாவிக்கடை, பெருந்துறை. |
| 31.05.2025 சனிக்கிழமை | காலை 9.30 மணி | கரூர் | ஆர்த்தி அழகம்மை மஹால், திண்ணப்பா தியேட்டர் அருகில், கரூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 27-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி